103

# சிறுவர் குரல்

குரல் -01 | மே - யூன் இதழ் | தொனி - 01



FOUNDED BY: SAVE THE CHILDREN IN SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 32


வெளியீடு:
அரும்புகள் சிறுவர் கழகம்
இளந்தளிர் சிறுவர் கழகம்
சிறகுகள் சிறுவர் கழகம்
தென்றல் சிறுவர் கழகம்
தேன்தமிழ் சிறுவர் கழகம்
வளர்பிறை சிறுவர் கழகம்

உதவி
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்



ஆசிரியர் குழு

அ. நிறோஜினி
கி. லீலிமலர்
சே. நிலோஜினி
அ.றெ. அனோஜன்
பீ. பியூட்சன்
அ. நிறோஜன்
கு. செலஸ்ரீன்
த. தர்சன்


THULIRGAL

## அட்டைப்பட விளக்கம்

சிறுவர்களாகிய நாங்கள் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்க மட்டுமல்ல இந்தப் பூமிக்கே பசுமையை, மகிழ்ச்சியை கொடுக்க ஆசைப்படுகின்றோம். எங்கள் குரல்களையும் கேளுங்கள். நாங்களும் உலகுக்கு ஒளி கொடுக்கவே விரும்புகின்றோம்.


அட்டைப்படம்
கி. லீலிமலர்

கணணி வடிவமைப்பு
செல்வி ஆ. யாழினி


சிறுவருக்கும் காதுகொடுங்கள்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்று பலரும் கூறுவதுண்டு. ஆனால் எம்போன்ற சிறுவர்களின் கருத்துக் களை யாரும் கேட்பதுமில்லை. எமது உணர்வுகளை சரியாகப் புரிந்து கொள்வது மில்லை. ஆனாலும் நாம் எம்மை வெளிப் படுத்த வேண்டும். எனவே தான் இச்சஞ் சிகை சிறுவர்களால் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட ஆக்கங்களைக்கொண்ட 'சிறுவர் குரலாக' வெளிவருகின்றது.

இச்சிறுவர் குரல் சஞ்சிகை மூலம் சிறுவர்களாகிய எமது கருத்துக்களையும் உணர்வுகளையும் உரிமைகளையும் பற்றிச் சிறியவர்களும் பெரியவர்களும் அறிவதுடன் சிறுவர்களிடையே விழிப்புணர்வை ஏற்ப டுத்தவல்ல சிறுவர்களின் சொந்தக்குரலாக, வெளிப்பாடாக, உந்துசக்தியாக இச்சஞ்சிகை அமைய வேண்டும் என்பது எமது பேரவா.

சிறுவர்களின் குரல்களும் கேட்கப்பட வேண்டும். மதிக்கப்படவும் வேண்டும். மேலும் எம் போன்ற சிறுவர்களின் பங்களிப்பு மூலம் நாம் அறிவிலும் ஆற்றலிலும் விருத்தியடை வதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனேயே சிறுவர் குரலானது இன்று உங்கள் கைகளிலே தவழ்கிறது.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதியுதவியை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (SCiSL) வழங்குகிறது. இந்நிறுவனம் விழி அமையம் ஊடாக எமக்கு வழங்கும் இவ்வுதவிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

சிறுவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் தாங்கியதாக வரும் இச்சிறுவர் குரலை ஒவ்வொருவரும் வாசித்துப் பயன்பெற வேண்டும் என்று கூறுவதுடன் சிறுவர் குரல் வெளிவருவதற்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

– ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சிறுவருக்கும் காது கொடுங்கள் | 01 |
| விழியின் ஆசிகள் | 03 |
| ஆசை | 04 |
| கொடிய அலையே உன்னால் | 05 |
| பரசூட்டும் நான்கு பயணிகளும் | 06 |
| சூரியகாந்திப்பூவும் சிறுவனும் | 06 |
| மாணவர்களும் தொலைக்காட்சியும் | 07 |
| சுனாமியே | 07 |
| நண்பிக்கு ஓர் மடல் | 08 |
| உழைப்பு | 09 |
| சிறுவர் பாடல் | 10 |
| வறுமையிற் கல்வி | 11 |
| சிறுவர் பற்றிய சினிமா | 12 |
| சிந்திப்போம் செயல்படுவோம் | 13 |
| நான் ஒரு பறவையானால் | 14 |
| சிறுவர் கொடியேற்றுவோம் | 14 |
| சிறுவர் பாட்டு | 15 |
| உலோகங்களின் குறியீடுகள் | 15 |
| தாயன்பு | 16 |
| அழிந்திடாத செல்வம் | 17 |
| மலர்களே | 17 |
| விஞ்ஞானமும் வாழ்வும் | 18 |
| மனம் மாறிய சிறுவன் | 19 |
| நகம் கடிப்பதைத் தவிர்ப்போம் | 20 |
| புத்தாண்டில் பட்டாசு | 20 |
| தோட்டம் | 21 |
| வித்தியாசமாய் சில நாடுகள் | 21 |
| துணுக்குச் செய்திகள் | 22 |
| உடைந்த மேசையின் சுயசரிதை | 22 |
| சிங்கமும் ஆடும் | 22 |
| திருக்குறள் பற்றி | 23 |
| அதிசய உலகம் | 23 |
| அன்பு | 24 |
| படமும் விளக்கமும் | 24 |
| பிறநாட்டுப் பழமொழிகள் | 25 |
| பொது அறிவு | 25 |
| எமது பிரதேசத்தில் சிறுவர்களின் நிலைப்பாடு | 26 |
| சிறுவர் உரிமைகள் பற்றிய படங்கள் | 27 |
| சிறுவர் உரிமைகள் என்றால் என்ன? | 28 |
| சிறுவர் சிந்தனைத் துளிகள் | 28 |
| பெண்களைப்பற்றி உலக நாடுகள் | 29 |
| பொன்மொழிகள் | 29 |
| கண்காட்சி | 30 |
| கல்வியின் மேன்மை | 30 |
| என் இனிய அப்பாவிற்கு | 30 |
| நகைச்சுவைத் துணுக்கு | 30 |
| மறக்க முடியாத சம்பவம் | 31 |
| எமது நன்றிகள் | 32 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியின் ஆசிகள்

எமது விழி அமையத்தினால் வழிநடத்தப்படுகின்ற ஆறு சிறுவர் கழகங்கள் இணைந்து சிறுவர் குரல் என்னும் இச்சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

மண்ணால் சூழப்பட்டிருக்கும் வைரங்களை பட்டை தீட்டி ஒளிரச்செய்வது போல எமது சிறார்களினுள் புதைந்து அமிழ்ந்திருக்கும் திறமைகள், ஆற்றல்கள் அனைத்தையும் வெளிக்கொண்டுவரும் முகமாகவும், சிறுவர்களின் கருத்துக்களை பிறர் செவிமடுப்பதில்லை என்ற சூழ்நிலையில் அவர்கள் தமது கருத்துக்களை சமுதாயத்தில் உள்ளோருக்கு எடுத்துக் கூறவும் இச்சஞ்சிகையானது ஒரு களமாக அமைந்துள்ளது. தாம் வாழும் சமுதாயத்தில் தாமும் அங்கத்தவர்கள் என்பதை சிறுவர்கள் இச்சஞ்சிகையூடாக தமது பெற்றோர், ஆசிரியர் மற்றும் பெரியோர்களுக்கு மிகவும் துல்லியமாகத் தெரியப்படுத்துகிறார்கள். இச்சஞ்சிகையில் அடங்கியுள்ள அனைத்து ஆக்கங்களும் சிறுவர் சிறுமியர்களின் சொந்த ஆக்கங்களாகவும் அவர்கள் தேடிப்பெற்ற விடயங்களாகவும் அமைந்துள்ளன. இவர்கள் தமது எண்ணங்களுக்கு எழுத்துருவும் படவுருவும் கொடுத்து ஒரு சிறப்பான சஞ்சிகையாக வெளிக்கொணர்ந்துள்ளார்கள்.

சிறுவர் குரல் எனும் இச்சஞ்சிகை வெளிவருவதற்கான நிதி அனுசரணையை எமது விழி அமையம் ஊடாக சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனம் (SCiSL) வழங்கி வருகின்றது. இவர்களுடைய நிதியுதவியோடு சிறுவர் குரல் ஆனது சிறுவர்களின் உணர்வுகளை மிகவும் துல்லியமாக பிரதிபலிக்கும் சஞ்சிகையாக தொடர்ந்து வெளிவரும் என எதிர்பார்க்கின்றோம். இச்சிறுவர்களின் முயற்சி மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

"வளர்க சிறுவர் குரல்"

ஊக்குவிப்பாளர்களும்
இணைப்பாளரும்
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

குடும்பப் பாரங்களினால் அழுத்தப்பட்டவர் தான் பரமசிவம். தினமும் இவர் எழுந்த பின்பு தான் சேவல் கூவுவது வழக்கம். மகனையும் மகளையும் தொந்தரவு செய்யாமல் படிக்கவிட்டு காலை வேலைகள் அனைத்தையும் தானே முடித்துவிட்டு வேலைக்குச் செல்லும்போது தனது இரண்டாவது மகனை போகும் வழியில் பள்ளியில் விட்டுச் செல்வதாக மகனைத் தயார் செய்தார். சைக்கிளில் மனைவி தந்த பைகளை மாட்டிக்கொண்டு மகனைப் பின் இருக்கையில் அமர்த்திய பின் "வாறேன் கமலா மாலை வர லேட்டாகும். ராமு வந்தால் தம்பியை பாடசாலையிலிருந்து கூட்டிவரச்சொல்" என்று தெருமுனைவரை குரல் கொடுத்துக்கொண்டே மகனுடன் பேச ஆரம்பித்தார்

"வீட்டுப்பாடம் எல்லாம் செய்திற்றியாப்பா....?"

"ம்..".

"வாற மாதம் முதல் மாக்ஸ் எடுக்கவேண்டும்"

"சரியப்பா..."

"சரி நீ படித்து பெரிய ஆளாய் வரவேண்டும் நல்லாப் படித்து பிளேன் எல்லாம் ஓடவேண்டும். நீ என்ன கேட்டாலும் அப்பா வாங்கித்தருவேன்"

"தீபாவளிக்கு ரஜனி படம் ரிலீஸ் டிக்கட் வாங்கித் தருவீங்களாப்பா?..."

"சரிப்பா...கண்டிப்பா வாங்கித்தருவேன்" என்று மகனின் ஆசைகளையும், எண்ணங்களையும் ஊக்கத்தையும் வளர்க்க முயற்சி செய்யும்போது ஸ்கூல் வந்துவிட்டது. மகனை இறக்கிவிட்டு "கண்ணா இந்தா 10 ருபா சொக்லேட் வாங்கிக்கோ... அப்பா ராத்திரி வீட்டிற்கு வரும்போது அல்வா வாங்கி வாறேன்" என்று கூறிக்கொண்டு விடை பெற்றார். மாலை 4 மணி பள்ளி முடிந்தவுடன் அண்ணன் ராசாவைத் தேடினான் கண்ணன். பக்கத்து வீட்டுக் கிட்டு அத்தான் வந்து அழைத்தான். கண்ணனை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ரேஸ் ஓடினான் வேகமாக. "ஐயையோ.... என்னண்ணே... இவ்வளவு வேகமா" என்று மூச்சுவிட்டுக்கொண்டே பேசினான கண்ணன். ரோட்டில் பஸ்சும் லொறிகளும் இவர்கள் அருகில் வந்து நின்று பின் சென்றது. சிலர் வாழ்த்தினார்கள் ஏச்சுக்களால்.

"கிட்டுமாமா... கிட்டுமாமா... உனக்குத்தெரியாதே என்னை கபில்தேவ் மாதிரி ஆக்குவேன் என்று எங்கப்பா சொன்னாரே..."

"ம்...ம்"

"ராத்திரி எனக்கு அல்வா வாங்கித்தாறன் என்றவர் நான் அதை உனக்குத் தாறேன் என்ன..."

"ம்...""என்ன கிட்டுமாமா... உம்முன்னே வர்ரே... ஆ.... பார்த்து.. பயமா இருக்கு நீ சைக்கிள் ஓடுகின்றது"

கண்ணன் வீடு வந்தது. சிறுவனை இரண்டு பேர் வந்து தூக்கிக்கொண்டு உள்ளே சென்றார்கள். "மாமா எப்ப வந்தனீங்கள்? சுதாகூட வந்திருக்கின்றா... நான் விளையாடணும்"

"சரிப்பா வா..." என்றவர் சொல்லி முடிக்கும் முன் குழந்தையை அணைத்துக் கொண்டு அழ கூடியிருந்த அனைவரும் அழ கண்ணன் சிறிது நேரம் புரியாமல் திருதிருவென விழித்துவிட்டு பெண்கள் கூடியிருக்கும் திசைநோக்கி ஓடினான். "பாலகா... உன்னை விட்டுப்போயிட்டாரே உங்கப்பா" என்று அழும் அன்னையின் மடியில் முகம் புதைத்துக்கொண்டான். அருகில் மாலையுடன் இரவு அல்வா வாங்கித்தருவதாக கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா மல்லாங்கப் படுத்துக்கிடக்கின்றார். பலவேளைகள் பசியை மறந்து துயரில் வாடி வேதனையில் மூழ்கிக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் பழைய நிலையை அடைய 10 நாட்கள் ஆகியது. அப்பா இறந்த பின் குடும்ப் பொறுப்புக்கள் ராமுவின் தலையில் ஏறி உட்கார்ந்து கொண்டது. அப்பாவைப் போலவே எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுச் செய்து தம்பிக்காகவும் தங்கைக்காகவும் பாடுபடஆரம்பித்தான்.

கண்ணனை மீண்டும் பள்ளிக்கு அழைத்துச்செல்ல சைக்கிளில் உட்கார வைத்தான். "நல்லாப் படிக்கனும் இனிமேல் எல்லாத்துக்கும் அண்ணா இருக்கிறேன் உனக்கு என்ன வேண்டுமோ கேளு நான் வாங்கித்தாறேன். தீபாவளிக்கு காற்சட்டை சேட் அப்புறம் ரஜனி படத்திற்கு ரிக்கட் இன்னும் உனக்கு என்னவேணுமோ கேளு வாங்கித்தாறேன்"

"ம்... அண்ணா எனக்கு அதெல்லாம் ஒன்றும்வேண்டாம் எனக்கு நீ தான் வேண்டும்"

அ. நிரோஜா.
தென்றல் சிறுவர் கழகம்

## கொடிய அலையே உன்னால்

மின்னல் மின்னி இடி இடிப்பது போல்
நின் நினைவுகளை மறக்க முயல்கிறேன் - அவை
மணியொலிகள் கேளாத செவிட்டுமைபோல்
கண்ணீர் மழை பொழிகின்றது.

உன் அலையோசை மொழிமலர மனமேங்கினேன்
அலையோசை ஊர்தொட்டவேளை கண் கலங்கினேன்
உன் சீற்றத்தால் என்னை மட்டும் ஏன் விட்டுவிட்டாய்
நீ விட்டதால் என் மனதைப் புண்படுத்தினாய்

உன் அலையோசையின் நளினங்கள் நான் ரசித்தவை - அவற்றை
ரசிப்பதற்கு மாத்திரமே நளினமிட்டாய் என நினைத்தேன் -மனித உயிரை
ருசிப்பதற்கு மாத்திரமே நளினமிட்டாய் என எண்ணவில்லை
என் விழித்திரைகள் இமைப்பதையே மறந்துவிட்டன

உன் வனப்பில் காந்தத்தை வைத்தாய் - பின்
கரையை முத்தமிட ஆசை கொண்டாய் என நினைத்தேன்
என் உயிரையே முத்தமிட வருவாயென சிந்தைகொள்ளவில்லை
உன் முத்தக் கொடூரத்தால் தப்பியவள் நான் மட்டுமே

கொடிய அரக்கனாய் வந்த நீ எம்
சின்னஞ்சிறிய பாலகர்களை குதறினாயே
தென்றலாய் வந்த நீ புயலாய் பூகம்பமாய் மாறியதேனோ
நான் என்ன பாவம் செய்தேன் என்னை மட்டும் விட்டுவிட்டாயே

அ. நிசாந்தினி
தென்றல் சிறுவர் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரசூட்டும் நான்கு பயணிகளும் (நகைச்சுவைக் கதை)

ஒரு விமானத்தில் 04 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரென அவ்விமானம் பழுதடைந்து விட்டதென பைலட் அறிவித்தார். விமானத்தில் மூன்று பரசூட்கள் மாத்திரம் இருந்தன. முதலில் டொக்ரர் வந்து "நோயாளிகளை பார்க்க வேண்டும் எனக்கொரு பரசூட் தாருங்கள்" என்று கேட்டார். அடுத்ததாக விழி நிறுவன இணைப்பாளர் வந்து "சிறுவர் கழகத்திற்குச் செல்ல வேண்டும்" என்று கூறி ஒரு பரசூட்டைப் பெற்றுக் கொண்டார். மூன்றாவதாக விஞ்ஞானி வந்து "சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை ஆராய வேண்டும்" என்று கூறி மூன்றாவது பரசூட்டையும் பெற்றுக் கொண்டார். இறுதியாக ஐயர் வந்து சொப்பிங் பையிலுள்ள பூக்களை கொட்டிவிட்டு "நயினாதீவில் பூசை வைக்க வேண்டும்" என்று கூறி வைத்திருந்த சொப்பிங் பையின் கைபிடியைப் பிடித்தபடி விமானத்திலிருந்து குதித்து விட்டார்.

அ.அனுரதன்
தென்றல் சிறுவர் கழகம்

## சூரியகாந்திப்பூவும் சிறுவனும்

ஓர் ஊரிலே காந்தன் என்னும் சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு சூரியகாந்திப் பூவென்றால் பிடிக்கும். ஆனால் அவனுக்கு சூரியகாந்திப் பூவைத் தெரியாது. அவனது நீண்ட நாள் ஆசை தான் சூரியகாந்திப் பூந்தோட்டத்தை காணவேண்டும் என்பதே. காந்தன் ஒன்பதாம் ஆண்டில் கல்வி கற்கும் சிறுவன். இவன் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். இவனுக்கு இரண்டு சகோதரிகளும் உண்டு. இவனது தந்தையும் விபத்தினால் இறந்து விட்டார். காந்தனது குடும்பத்தவர் வாழ்க்கையில் தினம் தினம் கஸ்ரம் தான். ஒருநாள் காந்தன் தனத நண்பன் மயூரனுடன் பாடசாலை சென்று கொண்டிருந்தான். அப்பொழுது பூ விற்கும் ஒருவர் வந்தார். காந்தன் அந்தப் பூ வியாபாரியிடம் சென்று "சூரியகாந்திப்பூ இருக்கா" என்று கேட்க அவர் "தம்பி வாங்குவதென்றால் மட்டும் கேள்" என்று அவனை ஏசினார். அவர் ஏசியதால் காந்தன் ஏமாற்றத்துடனும் வாடிய முகத்துடனும் பாடசாலை சென்றான். இப்படி அவனது வாழ்க்கை கழிந்தது.

பல மாதம் சென்று கழிந்தது. ஓர் நாள் அவனுடைய வகுப்பாசிரியர் கூறினார். "நான் உங்களை எல்லோரையும் சுற்றுலா கூட்டிக்கொண்டு போகிறேன். எங்கே தெரியுமோ?" என்றவுடன் காந்தன் 'கடவுளே பூந்தோட்டத்திற்கு கூட்டிக்கொண்டு போக வேண்டும்' என்று நினைத்தான். அவனுடைய ஆசிரியர் அவன் நினைத்த இடத்தை கூறினார். அவனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. எனக்கு வசதியில்லை என்றுகூட நினைக்கவில்லை. அவனுடைய நண்பன் கேட்டான் டேய் உனக்கு வசதியிருக்காடா? வருவதற்கு இல்லை என்றால் சொல் நான் கூட்டிக்கொண்டு போகிறேன் என்றான். அவன் கலங்கினான். அடுத்தநாள் எல்லோரும் புறப்பட்டனர். பூந்தோட்டத்தில் நிறைய பூ மரம் நின்றன. சேர் எல்லாப் பூக்களின் பெயரையும் சொல்லி விளங்கப்படுத்தினார். அடுத்ததாக காந்தனின் சூரியகாந்திப்பூதான் அவனுக்கு தெரியாது அதுதான் சூரியகாந்தி என்று சேர் பெயரை சொன்னதும் அவன் அதனருகே இருந்து விட்டான். அவனது பலநாள் ஆசை நிறைவேறியது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

மி.றொஸானி
அரும்புகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களும் தொலைக்காட்சியும்

நவீன விஞ்ஞான வளர்ச்சி இன்றைய உலகில் ஒரு பெரிய சவாலாகும். இவற்றுள் தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி மிக முக்கிய இடம் வகிக்கின்றது. இன்றைய மாணவர்கள் தொலைக்காட்சிகளில் செய்திகள், நாடகங்கள், விளையாட்டு, சிறுவர் நிகழ்ச்சி என்பவற்றை கூடுதலாகப் பார்த்து விளங்கிக்கொள்ளும் அதேவேளை இந்தப் பரந்த உலகையும் ஒரு சிறு கிராமமாக சுருக்கிக்கொள்வதில் தொடர்புசாதனங்கள் முக்கியமானதொன்றாக உள்ளது. இதேவேளை தொலைக்காட்சியானது ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் அல்லோலகல்லோலப்படுத்துவதற்கு காரணமாக உள்ளது. அதாவது, நாணயத்திற்கு இரண்டு பக்கங்களைப்போல் தொலைக்காட்சியினால் நன்மையும் தீமையும் ஏற்படுகின்றன.

அந்தவகையில் மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடசாலையில் கல்விகற்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் அவனது அறிவு வளர்கிறது. அதாவது பொது அறிவு, உலக விடயங்கள் என்பவற்றைக் கற்கின்றனர். இவற்றைப் பார்ப்பதிலே தேர்ச்சிபெற்ற மாணவரின் உள்ளம் தணியாத பசி கொண்டதாய் இருக்கும். வாழ்வினையும், வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியங்கள், நாடகங்கள் என்பவற்றைப் பார்ப்பதால் பற்பல புதிய அனுபவங்களைப் பெறுகின்றான். நல்லன எவை தீயன எவை எனப் பகுத்துணரும் பண்பு பெறுகின்றான். எதிர்கால வாழ்விற்கு தம்மை ஆயத்தம் செய்யும் உன்னத நிலை உருவாகிறது.

இவை தவிர நீலப்படங்கள், போதைவஸ்துப் பாவனை, பாலியல் துஸ்பிரயோகம் ஆகியவற்றை தொலைக்காட்சியில் பார்ப்பதன் மூலம் எமது மாணவர்கள் சிலர் அதற்கு அடிமையாகின்றார்கள். எமது மாணவ சமுதாயத்தை அழித்தொழிக்கும் அளவிற்கு இன்று தொலைக்காட்சியின் பாவனை அதிகமாக உள்ளது. இவற்றிலிருந்து ஒவ்வொரு மாணவனும் விலகித் தமது கற்றலுக்குத் தேவையான நல்ல செய்திகளைப் பிரித்து எடுத்துவிட்டு தீயவற்றை அப்படியே அகற்றிவிட வேண்டும். இதன் மூலம் சிறந்த மாணவர் சமுதாயம் உருவாகும் நிலை ஏற்படும்.

அ.றொ..அனோஜன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

# சுனாமியே..!

எம் அன்னைக் கடலே
ஏன் எம்மை மறந்தாயோ!
உன் மீது உயிர் வைத்து
உயிர் பிரிந்தவர் எத்தனை பேர்?
நம்பி வந்த எம்மை
நாசம் செய்து விட்டாயே!
சுமைகள் பல தந்து
சுழன்று போனாயே சுனாமியே!

ஜோ.பிரபாகர் றொபட்
தேன்தமிழ் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பிக்கு ஓர் மடல்...

வேலணை கிழக்கு,
வேலணை 4ஆம் வட்டாரம்,
06.05.2005.

அன்புள்ள நண்பி ரசிகாவுக்கு,

நான் நலம். அதுபோல் நீயும் உன் குடும்பத்தாரும் பல்பூரண சுகத்துடன் இருக்க சர்வ வல்லமை உடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறேன்.

மேலும் நான் எழுத நினைப்பது உன்னைப் பற்றித்தான். நான் முதல் எழுதிய கடிதத்தில் உங்கள் ஊரில் சிறுவர் கழகம் இருக்கின்றதா? அதில் சிறுவர் உரிமைகள் பேணப்படுகின்றனவா? என எழுதினேன். அதற்குப் பதில் தரும் வகையில் எங்கள் ஊரில் சிறுவர் கழகம் இல்லை. சிறுவர் கழகம் என்றால் என்ன என்று கேள்வி எழுப்பி எழுதியிருந்தீர்கள். நான் சொல்வதைக் கவனத்துடன் கேளுங்கள், சிறுவர் கழகம் என்ன என்பது உமக்குப் புரியும்.

சிறுவர் கழகம் என்பது...

1. எமது உரிமைகள் பேணப்படவும்.
2. எம்மில் மறைந்திருக்கும் எமது ஆற்றல்களைத் தட்டியெழுப்பவும் எமக்கு உதவுகின்ற கழகமாகும்.

உங்களுக்கு இன்னும் பல அரிய கருத்துகளை சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் சிறுவர் கழகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்தால் நீங்கள் பல நண்பர்களை தெரிந்து கொள்ளலாம். உங்களது வீட்டில் பிரச்சினை என்றால் ஒரே கவலையுடன் இராமல் நண்பர்களிடம் கூறி ஆறுதல் பெறலாம். நீங்கள் நண்பர்களைத் தெரிவு செய்யும் போது நல்லவர்களாக உங்களது கவலைக்கு ஆறுதல் தருபவராக கடைசி வரையும் கைவிடாதவராக தெரிவு செய்ய வேண்டும்.

அத்துடன் நாம் இங்கு பொது அறிவு, பாட்டு, கவிதை, நாடகம் என பல நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றோம். அதே போல் நீங்களும் உங்கள் ஊரில் ஒரு சிறுவர் கழகம் அமைத்து சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டும் எனவும் அவர்களில் மறைந்திருக்கும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தவும் நண்பர்களைத் தெரிந்து கொள்ளவும் பயன்படுத்துங்கள்.

அடுத்த கடிதம் என் கைக்கு வந்தவுடன் நீங்கள் சிறுவர் கழகத்தில் அங்கத்தவராக இருக்கிறீர்கள் எனவும் உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்துகிறீர்கள் எனவும் எழுதியிருத்தல் வேண்டும். இத்துடன் எனது சிறு மடலை முடிக்கின்றேன்.

இப்படிக்கு
பொ. புஸ்பமாலினி
சிறகுகள் சிறுவர் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை:

# உழைப்பு

ஒரு ஊரில் பெண்மணி ஒருத்தி இருந்தாள். அவளுடைய கணவர் மாரடைப்பால் இறந்துவிட்டார். அவளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தார்கள். கணவர் இறந்ததும் இவள் மிகவும் கஸ்டப்படலானாள். உண்பதற்கு உணவு இல்லை, உடுப்பதற்கு உடுப்பு இல்லை, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வசதி இல்லை. அவள் மிகவும் அல்லலப்பட்டாள். 'எனக்கு உண்பதற்கு உணவு இல்லை என்றாலும் நான்தான் படிக்கவில்லை என்றாலும் என் பிள்ளைகளைப் படிக்க வைத்து பெரியவர்களாய் ஆக்க வேண்டும்' என்பது அவளுடைய விருப்பம். என்ன செய்வது? அவளிடம் பணம் இல்லை. என்ன செய்வது என்று யோசித்து எப்படியாயினும் நான் ஒரு வேலை தேட வேண்டும் என்று நினைத்து வேலை தேடச் சென்றாள். வேலை தேடிச் சென்றவளுக்கு ஒருவரும் வேலை கொடுக்கவில்லை. அவள் கவலையுடன் ஒரு மரத்தின் கீழ் இருந்து யோசித்தாள்.

அப்போது சில பெண்கள் அவ்வழியால் வந்தார்கள். அவள் அவர்களிடம், "எனக்கு இங்கு ஏதாவது வேலை கிடைக்குமா?" என்று கேட்டாள். அதற்கு அவர்கள் "இங்கு ஒரு வேலையும் இல்லை" என்று சொன்னார்கள். அவர்களில் ஒருத்திக்கு இப்பெண்மணி மீது இரக்கம் வரவே "இதோ நீ இதே வழியால் செல். ஒரு பெரிய வீடு வரும். அவ்வீட்டுக்காரரிடம் சென்று கேள், அவர் உனக்கு வேலை தருவார்" என்று சொன்னாள். அப்பெண் அவ்வீட்டை அடைந்து அவ்வீட்டுக்காரரை அழைத்தாள். அவர் வெளியே வந்ததும் "ஐயா, நான் மிகவும் ஏழை. எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும். எனக்கு ஒரு சிறிய வேலை தாருங்கள்" என்று கெஞ்சினாள். அவர் அப்பெண் மீது இரக்கம் கொண்டு "நீ எனது தோட்டத்திற்குச் சென்று செடிகளுக்குத் தண்ணீர் ஊற்று" என்று கூறிவிட்டு சில அலுவல்களின் நிமித்தம் வெளியே சென்றுவிட்டார்.

அப்பெண் தோட்டத்தில் மற்றவர்களை விட உற்சாகத்துடனும் நேர்மையுடனும் வேலைகளைச் செய்தாள். திரும்பி வந்த முதலாளி அப்பெண்ணின் வேலைகளைக் கண்டு பாராட்டி "நீ மிகவும் நன்றாக வேலை செய்கிறாய். உன் பிள்ளைகளை படிப்பிப்பதற்காக நீ மிகவும் பாடுபடுகிறாய். இன்று முதல் என்னுடைய வீட்டிலிருந்து வேலைகளைச் செய்யலாம். உனது பிள்ளைகளை நான் படிப்பிக்கிறேன்" என்று கூறினார். அதற்கு அவளும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டாள். நாளடைவில் அப்பெரிய மனிதரின் உதவியுடன் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து அவர்களைப் பெரியவர்களாக்கித் தானும் சந்தோ'மாக வாழ்ந்து வந்தாள்.

செ. நசினி
சிறகுகள் சிறுவர் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பாடல்

சிறுவர்களே சிறுவர்களே உங்கள் இலக்கு என்ன
இதயத்திலே ஒளிந்திருக்கும் பெயரின் திறன் என்ன
(சிறுவர்களே....)

உயர்ந்த வந்த கழகமே
சேர்ந்ததனால் நன்மையே
(சிறுவர்களே....)

கிணற்றுத் தவளை போல இருந்தோமே
எம்மை நாமே புரிந்துகொண்டோமே
எங்கள் அறிவை ஊட்ட வந்த விழியே
எம் நிலைமைகளைப் புரிந்து வந்த ஒளியே
லாலா லாலா லாலா லாலா லே
(சிறுவர்களே....)

வண்ண வண்ண மலர்கள் போல்
நாம் சிரித்து மகிழ்வோமே
வானில் பறக்கும் பறவைகள் போல்
பறந்து திரிந்து வாழ்வோமே
லாலா லாலா லாலா லாலா லே
(சிறுவர்களே....)

சி.கம்லா
சிறகுகள் சிறுவர் கழகம்

அன்புள்ள சிறுவர்களுக்கு!
சிறுவர் குரல் சஞ்சிகையானது சிறுவர்களுக்காகவே சிறுவர்களின் ஆக்கங்களைத்தாங்கி வெளிவருகின்றது. எனவே, எமது அடுத்த சிறுவர் குரலுக்கு உங்களது சொந்த ஆக்கங்களையும் நீங்கள் எழுதி அனுப்பலாம். அதேபோல சிறுவர்களாகிய நீங்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் சுவாரஷ்யமான சம்பவங்கள் மற்றும் சிறுவர் குரல் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். நாங்கள் உங்கள் ஆக்கங்களை எமது அடுத்த சஞ்சிகையில் பிரசுரிப்போம்.
நீங்கள் உங்கள் ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்

**"சிறுவர் குரல்"**
**விழி உளசமூக மேம்பாட்டு அமையம்**
**17/4, றெயில்வே வீதி, கச்சேரியடி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையிற் கல்வி – நாடகம்

### காட்சி 1

ரகு : அம்மா அண்ணா எங்கே?

அம்மா : ரகு அண்ணா வேலையாலே வரவில்லை. ஏன் கேட்கிறாய்?

ரகு : இல்லை அம்மா எனக்கு பள்ளிக்கூடத்திலே புத்தகம் வாங்கச் சொன்னார்கள். அதுதான் அம்மா கேட்டேன்.

அம்மா : என்னப்பா செய்கிறது. நீ இன்றைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ற்று வா. நான் உனக்கு நாளைக்குப் புத்தகம் வாங்கித் தருகிறேன்.

ரகு : சரியம்மா.

(ரகு பாடசாலை செல்கிறான்).

### காட்சி 2 (வகுப்பறை)

ஆசிரியர் : இன்றைக்குப் புத்தகம் வாங்கி வராதவர்கள் எல்லாம் எழும்புங்கள்.

(ரகு மாத்திரம் எழும்பி நிற்கின்றான்)

ஆசிரியர் : அப்பா இல்லாத பையன் என்று உனக்கு நான் பல உதவிகள் செய்தனான். நீ ஒரு புத்தகம் வாங்காமல் வருகிறாய்.

(ஆசிரியர் அடிக்கிறார். ரகு அழுதவாறு வீடு செல்கிறான்).

### காட்சி 3

அம்மா : என்னப்பா ரகு நடந்தது, ஏன் அழுகிறாய்?

(ரகு ஒன்றும் பேசாது உள்ளே செல்கிறான்)

கமல் : அம்மா, அம்மா

அம்மா : ரகு அண்ணா வாறாண்டா.

ரகு : அண்ணா புத்தகம் வாங்கவில்லையா?

கமல் : இல்லையடா (அழுதவாறு) நாங்கள் அப்பாவின் திவசத்திற்கு வாங்கிய பணம் கொடுக்கவில்லையே என்று முதலாளி என்னுடைய சம்பளத்தை கழித்துவிட்டார். நான் நாளைக்கு உனக்குப் புத்தகம் வாங்கித் தருகிறேன்.

ரகு : சரி அண்ணா

### காட்சி 4 (வகுப்பறை)

ஆசிரியர் : ரகு இங்கே வா, புத்தகம் கொண்டு வந்தாயா?

ரகு : அண்ணா புத்தகம் கொண்டு வருவார்.

ஆசிரியர் : சரி, 30 நிமிடம் பார்த்துவிட்டு உன்னை என்ன செய்கிறேன் பார்.

(30 நிமிடம் ஆன பின்னரும் கமல் வரவில்லை)

ஆசிரியர் : ரகு இந்தா உன்னுடைய சேட்டிவிக்கற். வீட்டை போ.

(ரகு அழுதபடி வீடு திரும்புகிறான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி 05

(வீட்டிலே நிறைய சனங்கள் காணப்படுகின்றனர்.)

ரகு : அம்மா அம்மா

அம்மா : இன்றைக்குப் புத்தகம் வாங்கித் தாறவன் என்றவன் புத்தகம் வாங்க முடியாமல் மருந்து குடித்துவிட்டான்.

ரகு : அண்ணா அண்ணா என்னை விட்டுவிட்டுப் போய்விட்டீர்களா?

(கமல் இறந்து பல நாட்களானது)

காட்சி 06

(ரகு தனது படிப்பை பாடசாலை செல்லாது வீட்டிலிருந்தே கற்றான். இவ்வாறு பல ஆண்டுகள் கற்று வேலைக்கு அப்ளிக்கேஷன் போட்டான்).

தபாற்காரன் : இங்கே யார் ரகு?

அம்மா : என்ர மகன்தான்.

தபாற்காரன் : இந்தாங்கம்மா கடிதம்.

அம்மா : ரகு, ரகு உனக்குக் கடிதம் வந்திருக்கு.

ரகு : தாங்கம்மா படிக்கிறேன்.

அம்மா : இந்தாப்பா

(ரகு கடிதத்தைப் பிரிக்கிறான்)

ரகு : அம்மா எனக்கு மோட்டார் லிமிடெட் கம்பனியில் வேலை கிடைத்துள்ளது.

அம்மா : என்ர ராசா, தங்கம் பணம் செலவில்லாமல் உனக்கு வேலை கிடைத்துவிட்டது.

(அதற்கு ரகு அழுகிறான்)

அம்மா : ஏனப்பா அழுகிறாய்.

ரகு : இல்லையம்மா இப்ப அண்ணாவும் எங்களோடு இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

அம்மா : கவலையை விடப்பா. விதியை யாராலும் தடுக்க முடியாது. நீ ஒன்றை மட்டும் மறந்துவிடக் கூடாது. நீ கற்ற கல்வி வறுமையில் கல்வி. நீ உன்னைப் போல கஷ்டப்படுகின்ற பிள்ளைகளின் கல்விக்கு கட்டாயம் உதவ வேண்டும். இதை நீ மறந்துவிடாதே.

ரகு : சரி அம்மா

அ. நிரோஜன்
சிறகுகள் சிறுவர் கழகம்.

## சிறுவர் பற்றிய சினிமா

அண்மையில் பார்த்திபன் அவர்கள் நடித்து வெளியாகிய கண்ணாடிப் பூக்கள் எனும் திரைப்படம் சிறுவரின் ஆற்றலை மேலும் வளர்க்கக்கூடியதாகவும் அவர்களின் சிந்தனையைத் தூண்டுவது பற்றியதாகவும் அமைந்துள்ளது. இத்திரைப்படத்தின் கருத்தினை நோக்குவோமாயின், ஒரு சிறுவனின் மனநிலையையும் அவனது தாய், தந்தையர் அவனை எவ்வாறு பேணுகிறார்கள் என்பது பற்றியும் அவனது ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. மேலும் சிறுவர்களது ஆத்திரத்தின் விளைவுகள் பற்றியும் அந்த ஆத்திரத்தைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் இப்படம் கூறுகிறது. இதனால் இத்திரைப்படத்தை சிறுவர்கள் அதிக ஆர்வம் கொண்டு விரும்பிப் பார்க்கிறார்கள்.

அ. நிரோஜன்
சிறகுகள் சிறுவர் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போம் செயற்படுவோம்

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு எப்படி ஏற்படுகின்றது என்பதல்ல முக்கியம். அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதே முக்கியம்.

ஈட்டி பிடித்தவனின் கையில் வடு மறைந்துவிடும். குத்துப்பட்ட இதயத்திலிருந்துதான் இரத்தம் கொட்டிக்கொண்டு இருக்கும்.

ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழும்போதெல்லாம் எழுந்தான் என்பதுதான் பெருமை.

உயரே போகும் பொழுது சந்திப்பவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் கீழே வரும் போது மீண்டும் அவர்களைச் சந்திக்க வேண்டி வரும்.

அறிவு இருப்பவர்கிடையே வேறுபாடு இருப்பது இயற்கை. ஏனெனில் அவர்களுக்கு அறிவு இருக்கிறது என்பதற்கு அதுவே அடையாளம்.

எவ்வாறு அளவுக்கு மிஞ்சி உணவு உட்கொள்வதால் உடலுக்குத் தீங்கு விளையுமோ அவ்வாறே அதிகப்படியான ஆசைகள் மனதில் அசை போடுவதால் உளரீதியான தீங்குகளும் மன உளைச்சலும் ஏற்படும்.

தூய்மையான மனதின் அறிகுறியே அவர்களின் உரத்த சிரிப்புத்தான்.

எந்த விடயத்தையும் தெரியாது என நினைத்து செய்து பார்த்தால் அந்த விடயத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளலாம்.

பேசுமுன் கேளுங்கள். எழுதுமுன் யோசியுங்கள். செலவழிக்குமுன் சம்பாதியுங்கள்.

எல்லோரையும் மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமென முயற்சியில் ஈடுபட்டால் ஒருவரும் மகிழ்ச்சியடையமாட்டார்கள். இறுதியில் துயரமே ஏற்படும்.

கடவுள் இல்லை என ஒருவன் நினைப்பானானால் அதுவும் கடவுளின் செயலே.

மனவுறுதியில் இனிய சொற்களும் மகிழ்ச்சியான வாழ்வும் தீபங்கள்.

ஒரு முகத்துடன் முயற்சி செய்தால் உன்னால் முடியாதது ஒன்றும் இல்லை.

க. செந்தூர்ச்செல்வன்
இளந்தளிர் சிறுவர் கழகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஒரு பறவையானால்...

நான் ஒரு பறவையானால் சுதந்திரமாகப் பறந்து திரிவேன். அதனை எனது மகிழ்ச்சியான பொழுதுபோக்காகக் கழிப்பேன். எனக்கு விரும்பிய பழங்களை நான் அதிகம் உண்ணுவேன். எனது நண்பர்களுடன் சேர்ந்து இரை தேடச் செல்வேன். அழகிய சோலைகளை அழகிய உலகத்தை நான் இரசிப்பேன். நான் கூட்டில் அடைபட்டு துன்பப்படுவது எனக்குப் பிடிக்காது. எனக்கு அது கவலையைத் தருகின்றது. நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து வேறு இடங்களைச் சுற்றிப்பார்ப்பேன்.

நண்பர்களுடன் முரண்படாது சந்தோசமாக நாட்களைக் கழிப்பதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு. இப்படி வாழ்வதைத்தான் நான் விரும்புவதும் உண்டு. நான் வயல்களில் இரைதேடச் செல்லும்போது என்னை நெற்கதிர்கள் வரவேற்பதுபோல காட்சியளிக்கும். நான் இரையைக் கொத்தி உண்ணும்போது வயலுக்கு சொந்தக்காரன் எங்களை விரட்டிவிடுவான்.

நாங்கள் போகின்றது போலக் காட்டி திரும்ப வந்து அந்த நெற்கதிர்களைத் திரும்பவும் உண்போம். எதனை உண்பது என்று தெரியாமல் அங்கும் இங்குமாக கொறித்துவிட்டுப் பறந்து செல்வோம். விடிந்ததும் இனிமையாக நான் எனது நண்பர்களுடன் பாடிச்செல்வதும் மழைத்துளிகளில் நனைவதும் எனக்கு மிகவும் விருப்பம். நான் அப்படிப் பறந்துசெல்லும்போது நீர்த்துளிகள் மரத்தின் மீது விழுந்து சிரிப்பதுபோல காட்சியளிக்கும். நான் அதை இரசித்துக் கொண்டே செல்வேன்.

- வே.கிறிஸ்ரீனா

வளர்பிறை சிறுவர் கழகம்

<u>சிறுவர் கொடியேற்றுவோம்</u>

நான் சிறுவர் கொடியை
நாட்டி வைப்பதிலே
நாட்டமாய் இருக்கின்றேன் – ஆனால்
நீ பிடுங்கி எறிவதில் பிடிவாதமாய்
இருக்கின்றாய்
எதற்காக இந்தக் கழகங்கள்
கவிதைகள் புன்னகை எல்லாம்
அதற்கு ஒரு பதில் சொல்வாயா?

கழகத்தை வரவேற்க
கதவு திறப்பதுபோல்
அமைந்திட்ட எனது வீடு
ஒரு கூட்டத்தில் கூடியிருப்பது
மாதிரி கழகத்திலே
தினந்தோறும் உதிரும்
சிறுவர்களை வாசலில் மலரும்
பூக்களை வரவேற்கிறது

தெ.மோகனகுமாரி

வளர்பிறை சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பாடல்

சிறுவர்களே சிறுமிகளே ஓடி வாருங்கள்
சிறுவர் சபை சேர்ந்திடவே கூடி வாருங்கள்
சிறுவர் பணி செய்ய ஓடி வாருங்கள்
குழந்தைகளாய்க் கூடி வாருங்கள்

அன்பும் நட்பும் எம்மிடத்தில்
பெருகிடவே-நாம் அரும்பணி
புரியலாம் உலகினிலே
அன்புச் சிறுவர் எம்மிடத்தில் வாழ்ந்திடவே
நாம் அயலாரரை அன்பு செய்வோம் தோழர்களே

கூடிக்கூடி செவிப்போம் சிறுவர் நாம்
ஒன்றாய்க் கூடி ஆடி மகிழ்வோம் சபைதனிலே
சிறுவரை எம் உள்ளத்தில் ஏற்றிடுவோம்
அவர்களுக்காய் நாம் வாழ்ந்திடுவோம்

சிறுவர் வழிநடந்திடுவோம்
அவர்கள் காட்டிய பாதையில் பணி தொடர்வோம்
சிறுவர்களாய் எம்மை அர்பணிப்போம்
சிறுவர் சபை வாழ்த்தி உழைத்திடுவோம்

- பீ. பியூட்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## உலோகங்களின் குறியீடுகள்

ஐதரசன் வாயுவின் குறியீடு யாது?
காபனின் குறியீடு யாது?
நைதரசன் வாயுவின் குறியீடு யாது?
ஒட்சிசன் வாயுவின் குறியிடு யாது?
சோடியத்தின் குறியீடு யாது?
மக்னீசியத்தின் குறியிடு யாது?
அலுமினியத்தின் குறியீடு யாது?
கந்தகத்தின் குறியீடு யாது?
பொட்டாசியத்தின் குறியீடு யாது?
ஆகன் வாயுவின் குறியீடு யாது?

விடைகள்

| | |
|---|---|
| 1. H | 2. C |
| 3. N | 4. O |
| 5. Na | 6. Mg |
| 7. Al | 8. S |
| 9. K | 10. Ar |

- க. சதீஸ்குமார்
சிறகுகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு


ஈரைந்து மாதம் கருவறையில்
எனைச் சுமந்தாய்
ஈன்றெடுத்த பின்னும்
கண்விழித்து எனைக்காத்தாய்

உதிரத்தைப் பாலாக்கி - என்
உடலுக்கு ஊட்டம் தந்தாய்
நிலாச்சோறு நீயூட்ட - உன்
நிலாமுகம் பார்த்து
நான் உணவு உண்டேன்


என் பிஞ்சு விரல் நீ பிடிக்க - உன்
தயவில் நான் நடை பயின்றேன்
பள்ளிப் பருவம் வந்ததும்
படாத கஸ்டமெல்லாம் பட்டு - எனைப்
படிக்க வைத்தாய்
பரீட்சை நெருங்கி வந்ததும் - உன்
பசி தூக்கம் மறந்து
என்னுடன் துணையிருந்தாய்

இன்னுமோர் ஜென்மம் இருக்கில்
உன் கருவில் மீண்டும் உருவாகி
உன் மடியில் தவழ்ந்திட
வரமொன்று தருவாயோ
என் தாயே!!!

கி. லீமிலர்
தென்றல் சிறுவர்



சே.நலோஜினி





அ.றொ.அனோஜ



இ.சத்தியரூபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.லீலிமலர்



மலர்களே!

வண்ண வண்ண மலர்களே
வாசமுள்ள மலர்களே
சின்னச் சின்ன மலர்களே
சிரித்து மகிழும் மலர்களே

மேதினில் மலர்ந்து காலைவேளை
நிறமாகியுள்ள மலர்களே
நித்தம் நித்தம் விடியலை
நினைவுகூரும் மலர்களே

நிறைந்த பூக்கும் மலர்களே
நேரம் பார்த்து காலையில்
நிறமாகிவிட்ட மலர்களே
வான்மதி காணும் மலர்களே

ஒரே நிலத்தில் பிறந்திட்ட
ஒற்றுமையான மலர்களே
ஈழ மாதா பெற்றெடுத்த
பாசமுள்ள மலர்களே

அ.நிரோஜினி
வளர்பிறை சிறுவர் கழகம்

# அழிந்திடாத செல்வம்

கல்வியை போலொரு அழிந்திடாச் செல்வம்
கண்டதும் உண்டே உலகினிலே
தொல் புகழ் பெருமை பெற்றவரெல்லாம்
துலங்குவதிங்கு எதனாலே
வல்லவராக உயர்ந்தவரெல்லாம்
வளர்ச்சி பெற்றது எதனாலே
பல்வாக சாதனை படைத்தவரெல்லாம்
ப த்த கல்வியின் அறிவாலே
விந்தனைகள் புரிந்திடும் விஞ்ஞானமெல்லாம்
சிந்தையின் கல்வியைச் சிறப்புடன்
செய்கின்ற நற்பணி அதனாலே
மந்தைகள் போல வளர்பவர் எல்லாம்
மாறிட வேண்டும் அறிவாலே
வந்தனை செய்திடல் வாலறிவான்
தன்னை
நூலறிவில் பெற்ற கொடையானது
கற்றவர் கூடச் சொல்லிவிடுவார்கள்
உறவினர் அல்ல ஊரர் என்று
கற்றவர் மலைபோல உயர்ந்திடுவார் நிதம்
தற்சமுதாயம் வளர்ந்திட வேண்டும்
கற்றவர் பெருகிட வலியது வேண்டும்

மேகலா





கி.லீலிமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் வாழ்வும்

இன்று நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இயந்திர யுகமும் அவசரகதியும் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின் மைந்தா் நாம் விண்வெளியில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தலை நிமிர்ந்து நிற்கின்றோம். தொழில்நுட்பம் பொறியியல், மருத்துவம், இலக்கியம், மொழிஅறிவு எதிலும் வெற்றிக்கொடி நாட்டியபடி மனிதன் பயணம் செய்கின்றான். இவ்வளவு பெரிய சாதனைகளின் அடித்தளமாக அமைந்திருப்பது விஞ்ஞானமே. இவ்விஞ்ஞானம் வாழ்வோடு கொண்ட தொடர்புகளையும் நயநட்டங்களையும் சற்றே சீர் தூக்கிப் பார்ப்போம்.

விரிந்து பரந்த உலகை அடக்கியாளும் அளவிற்கு மானிடம் வளர்ந்த்திருப்பதற்கு காரணம் விஞ்ஞானமே ஆகும். விஞ்ஞான வளர்ச்சி சடுதியாக வந்ததொரு சாதனை அல்ல. அன்றைய மனிதன் விலங்கோடு விலங்காய் பேதமற்று வாழ்ந்தான். காலப்போக்கில் சிந்தனை வடிவில் விஞ்ஞானச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. தொழிலாளர் வர்க்கங்களும் சிந்தனை திருப்பங்களும் ஒன்று சேர ஏற்றி வைத்த அகல் பிரகாசிக்கத் தொடங்கியது. தீயும், சுழலும் சக்கரங்களும் பிறந்தன. மனித குலத்திற்கே உரித்தான மொழிப்பயன்பாடும் பெரிதும் வளர்ந்தன. விலங்கு நடத்தையிலிருந்து மனிதன் வேகமாய் விலகத் தொடங்கினான்.

இன்று விஞ்ஞானம் வானத்திற்கும் பூமிக்குமிடையே விரிந்து பரந்து கிடக்கின்றது. நெருப்பிற் கலந்த சூடுபோல வாழ்வோடு பிணைந்து நடக்கின்றது. விஞ்ஞானச் சுடர்ஒளி பரவாத இடம்தான் எது? முதலாவதாக போக்குவரத்துத்துறையை எடுத்துக்கொள்வோம். அன்று கால்நடையாகவே பலரும் பயணித்தார்கள். பயணச்சிரமமும் நேரவிரயமும் சொல்லும் தரமன்று துவிச்சக்கரவண்டியிலிருந்து விண்வெளிக்கலம்வரை கண்டுபிடித்த மாநிலம் இறுமாப்புடன் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

த.தர்ஷன்
இளந்தளிர் சிறுவர் கழகம்



அ.நிரோஜராஜ்

சிறகுகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்மாறிய சிறுவன்

ஒரு ஊரில் ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள் மகன் பெயர் கமல், மகள் பெயர் கமலா. கமலா தாய் சொற்படி நடப்பாள். கமலோ தாய் சொற்படி நடக்கமாட்டான். கமலா தமது அண்ணன் கமலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வாள். ஆனால் கமலோ தனது தங்கைக்கு ஒரு உதவியும் செய்யமாட்டான். ஒரு நாள் கமல் தன் தாயிடம் சிறுவர் கழக கூட்டமென்று சொல்லிவிட்டு விளையாடச் சென்றான். விளையாடிவிட்டு வீடு திரும்பும் போது கமலின் காலில் கல்லடித்து மிகப் பெரிய காயம். இதனைக் கண்ட கமலா தனது அண்ணனுக்கு தேவையான உதவிகளை செய்து மருந்தும் கட்டினாள். அதனால் அவன் வெகுவிரைவில் குணமடைந்தான். கமலா செய்த உதவிகளையெல்லாம் கண்ட அவனுடைய தாயார் "உனது தங்கை உன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் தெரியுதா? ஆனால் நீயோ அவளோடு சண்டை போடுவதும், ஒரு உதவி கேட்டால்க்கூட செய்வதில்லை" என்று கூறினாள். பல அறிவுரைகளையும் கூறினாள். அதிலிருந்து கமல் தன் தங்கை மீது அன்பு கொண்டு அவளுக்கு என்ன உதவியென்றாலும் செய்து கொடுப்பான். அவனது தாயும் தங்கையும் கமலின் மனமாற்றத்தைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

றொ.றொமன்சியா
அரும்புகள் சிறுவர் கழகம்




யூ.சதீஸ்

அன்பார்ந்த நண்பர்களே!

நகம் கடிப்பது தவறாகும் பழக்கமாகும்
நகங்கள் எளிதாக அசுத்தமடையக்கூடியனவ.
அந்த அசுத்தங்கள் மூலம் நோய்க்கிருமிகள்
உடலுக்குள் பரவும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.
எனவே நகங்களை வெட்டிச்சுத்தமாக
வைத்திருக்க வேண்டும். உணவை உண்ணும் முன்னர்
சவர்க்காரத்தைப்பூசி கைகளைச் சுத்தம் செய்துகொள்ள
வேண்டும். தினமும் பாடசாலைவிட்டு வீடு சென்றதும்
கை, கால், முகம் கழுவ மறவாதீர்கள்.
இனிமேல் நகம் கடிக்க மாட்டோம் என்று
உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்

தம்பி தங்கையரே:-

கிணற்றில் அல்லது ஆற்றில் இருந்து கொண்டுவந்த நீரை எப்போதும் கொதிக்கவைத்து ஆறியபின் பருகுவோம்.

யூ. சதீஸ்
தேந்தமிழ் சிறுவர் கழகம்

## புத்தாண்டில் பட்டாசு

புத்தாண்டு என்றாலே உடன் எமக்கு நினைவுக்கு வருவது புத்தாடையும் பட்டாசும் தான் சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் இப்பட்டாசு பல அழிவுகளையும் தந்துவிடக்கூடியது. ஆனாலும் இப்பட்டாசின் வரலாற்றில் நாம் அறிந்திருத்தல் அவசியம். சீனாவை ஆண்ட வம்சத்தினர் தான் தற்போது இருப்பது போல் காகிதத்தில் வெடிமருந்தை திணித்து வெடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர். டடாஸ் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பட்டாசு என்ற பெயர் வந்தது. பட்டாசை சீனவெடி என்று அழைத்தனர். புத்தாண்டு தினத்தில் நாம் பட்டாசு வெடிப்பதுபோல் ஜேர்மனி நாட்டில் வசந்தகாலம் பிறக்கும் போது பட்டாசு வெடிப்பர். தென் அமெரிக்காவில் துறவிகள் இராணுவத்திற்கு மட்டுமே இருந்தது. பிரான்ஸ் நாட்டை ஆண்ட மன்னன் டாடாஸ் இப்படியாக உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்துள்ள பட்டாசு உலகில் பல நாடுகளில் கைத்தொழில் நிறுவனங்களில் உருவாக்கவும் ஏழைகளின் பட்டினியைப் போக்கவும் காரணமாக இருக்கின்றதோடு பட்டாசை வெடிக்கும் போது பல நச்சுக்கிருமிகள் தம் நிழலில் இருந்து அழிந்துவிடவும் உதவுகின்றது. ஆகையினால் நமது மகிழ்ச்சிக்கும் சூழல் சுத்தத்திற்கும் உதவும் பட்டாசை கவனமாக வெடித்து மகிழ்வோம்.

த.தர்சன்
இளந்தளிர் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டம்

சின்னச் சின்ன தோட்டம்
சிறிய நல்ல தோட்டம்
வண்ணப் பூக்கள் மலர்ந்திடும்
வடிவான தோட்டம்

அல்லி மலரும் காலையில்
ஆம்பல் கூம்பும் காலையில்
எங்கள் தோட்டப் பூக்கள்
எப்போதும் நிறைந்திருக்கும்

சின்னத் தம்பி பார்த்திடும்
சிங்காரத் தோட்டம்
முதியோர் பார்த்து மகிழ்ந்திடும்
நேர்த்தியான தோட்டம்

சின்னத் தோட்டம் மரத்தியில்
சிறிய பொம்மை கட்டியே
பயிரை அழிக்கும் பறவையை
பறக்க விரட்டி அடித்திடுவோம்

அ.நிறோஜினி
வளர்பிறை சிறுவர் கழகம்



யோ.யமுனாராணி

வித்தியாசமாய் சில நாடுகள்

| | |
|---|---|
| கை உள்ள நாடு | - இலங்கை |
| அன்னை உள்ள நாடு | - தாய்லாந்து |
| சோர்வு உள்ள நாடு | - அயர்லாந்து |
| குளிர் உள்ள நாடு | - ஐஸ்லாந்து |
| கல் உள்ள நாடு | - போர்த்துக்கல் |
| பல் உள்ள நாடு | - பல்கேரியா |
| உடல் உள்ள நாடு | - ருமேனியா |

கு.நிமலதாசன்
அரும்புகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்குச் செய்திகள்

உலகில் மிகச் சிறிய தியேட்டர் ஜேர்மனியில் உள்ளது. அத்தியேட்டரின் உள்ளே குறைந்த பட்சம் முப்பது பேர் அமரலாம்.

விண்வெளியில் நடப்பட்ட முதல் கொடி ரஸ்ய நாட்டின் தேசிய கொடி.

உலகின் முதல் நாவல் யப்பானிய மொழியில்தான் வெளிவந்தது.

சர்வதேச அளவில் பத்திரியையாளர்களுக்கு வழங்கப்படும் விருதின் பெயர் புலிட்சர் என்பதாகும்.

உலகில் சணல் உற்பத்தியில் முதல் இடத்தில் இருக்கும் நாடு பங்களாதேஸ் ஆகும்.

உலகின் மிகப்பெரிய நூலகம் அமெரிக்காவின் வாஸிங்டன் நகரமாகும்.

கஜாயினி
இளந்தளிர் சிறுவர் கழகம்

## உடைந்த மேசையின் சுயசரிதை

நான் இப்போது உடைந்த மேசை பேசுகிறேன். நான் தற்போது ஒரு மூலையில் இருக்கின்றேன். நான் கொழும்பில் இருந்து ஏற்றுமதி செய்து யாழ்/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் இறக்குமதி செய்தேன். எனக்கு நான்கு வன்வார்களும் வெள்ளி முத்துப்போன்ற நட்டுக்களும் தான் இருக்கின்றன. என்னை ஒரு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது அந்த ஆசிரியர் என்னை சுத்தமாகக் கழுவி பாதுகாத்து வந்தார். அப்போது எனக்கு இரண்டு லாச்சிப்பெட்டிகளும் உண்டு. ஆனால் அங்கு எனக்கு எதிரிகளும் உண்டு. எதிரிகளைப் பற்றி சொல்கின்றேன் கேளுங்கள். அங்குள்ள மாணவர்கள் எனக்கு மேல் ஏறி துள்ளிக்குதித்து என்னைச் சித்திரவதை செய்வார்கள். ஆனால் அந்த ஆசிரியர் அப்படியல்ல. அவர்களுக்கு சில அறிவுகளைச் சொல்லி அவர்களை நல்லவர்களாக மாற்றினார். இவ்வளவுமா? அல்ல. இன்னும் பல விசயம் உண்டு. ஆனால் சொல்வதற்கு இடமில்லை.

யோ. சுஜீவன்
இளந்தளிர் சிறுவர் கழகம்

## சிங்கமும் ஆடும்

ஆடு ஒன்று பாறை ஒன்றின் மீது நின்று விளையாடிக்கொண்டிருந்தது. இதை ஒரு சிங்கம் கண்டு ஆட்டைப் பிடித்து தின்ன நினைத்தது. அது ஆட்டை நோக்கி “ஆட்டு அண்ணாவே ஏன் நீங்கள் தனியே விளையாடுகிறீர்கள். அந்தப் பாறையோ பயங்கரமானது. நீங்கள் கீழே வந்து என்னுடன் சேர்ந்து விளையாடலாமே” என்றது. ஆடு சிங்கத்திடம் “ஓ சிங்கமே நீ எவ்வளவு நல்லவன். உனது அறிவுரைக்கு நன்றி. நான் யாருடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்று எனக்கு தெரியும். நீ உனக்கு ஏற்ற நண்பர்களுடன் சென்று விளையாடு” என்றது. சிங்கம் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றது.

த.தர்சன்
இளந்தளிர் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.லீமலர்





# அழிந்திடாத செல்வம்

கல்வியை போலொரு அழிந்திடாச் செல்வம்
கண்டதும் உண்டே உலகினிலே
தொல் புகழ் பெருமை பெற்றவரெல்லாம்
துலங்குவதிங்கு எதனாலே
வல்லவராக உயர்ந்தவரெல்லாம்
வளர்ச்சி பெற்றது எதனாலே
பல்வாக சாதனை படைத்தவரெல்லாம்
ப த்த கல்வியின் அறிவாலே
விந்தனைகள் புரிந்திடும் விஞ்ஞானமெல்லாம்
சிந்தையின் கல்வியைச் சிறப்புடன்
செய்கின்ற நற்பணி அதனாலே
மந்தைகள் போல வளர்பவர் எல்லாம்
மாறிட வேண்டும் அறிவாலே
வந்தனை செய்திடல் வாலறிவான்
தன்னை
நூலறிவில் பெற்ற கொடையானது
கற்றவர் கூடச் சொல்லிவிடுவார்கள்
உறவினர் அல்ல ஊரார் என்று
கற்றவர் மலைபோல உயர்ந்திடுவார் நிதம்
தற்சமுதாயம் வளர்ந்திட வேண்டும்
கற்றவர் பெருகிட வலியது வேண்டும்

மேகலா

மலர்களே!

வண்ண வண்ண மலர்களே
வாசமுள்ள மலர்களே
சின்னச் சின்ன மலர்களே
சிரித்து மகிழும் மலர்களே

மேதினில் மலர்ந்து காலைவேளை
நிறமாகியுள்ள மலர்களே
நித்தம் நித்தம் விடியலை
நினைவுகூரும் மலர்களே

நிறைந்த பூக்கும் மலர்களே
நேரம் பார்த்து காலையில்
நிறமாகிவிட்ட மலர்களே
வான்மதி காணும் மலர்களே

ஒரே நிலத்தில் பிறந்திட்ட
ஒற்றுமையான மலர்களே
ஈழ மாதா பெற்றெடுத்த
பாசமுள்ள மலர்களே

அ.நிரோஜினி
வளர்பிறை சிறுவர் கழகம்



கி.லீமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் வாழ்வும்

இன்று நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இயந்திர யுகமும் அவசரகதியும் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின் மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தலை நிமிர்ந்து நிற்கின்றோம். தொழில்நுட்பம் பொறியியல், மருத்துவம், இலக்கியம், மொழிஅறிவு எதிலும் வெற்றிக்கொடி நாட்டியபடி மனிதன் பயணம் செய்கின்றான். இவ்வளவு பெரிய சாதனைகளின் அடித்தளமாக அமைந்திருப்பது விஞ்ஞானமே. இவ்விஞ்ஞானம் வாழ்வோடு கொண்ட தொடர்புகளையும் நயநட்டங்களையும் சற்றே சீர் தூக்கிப் பார்ப்போம்.

விரிந்து பரந்த உலகை அடக்கியாளும் அளவிற்கு மானிடம் வளர்ந்த்திருப்பதற்கு காரணம் விஞ்ஞானமே ஆகும். விஞ்ஞான வளர்ச்சி சடுதியாக வந்ததொரு சாதனை அல்ல. அன்றைய மனிதன் விலங்கோடு விலங்காய் பேதமற்று வாழ்ந்தான். காலப்போக்கில் சிந்தனை வடிவில் விஞ்ஞானச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. தொழிலாளர் வர்க்கங்களும் சிந்தனை திருப்பங்களும் ஒன்று சேர ஏற்றி வைத்த அகல் பிரகாசிக்கத் தொடங்கியது. தீயும், சுழலும் சக்கரங்களும் பிறந்தன. மனித குலத்திற்கே உரித்தான மொழிப்பயன்பாடும் பெரிதும் வளர்ந்தன. விலங்கு நடத்தையிலிருந்து மனிதன் வேகமாய் விலகத் தொடங்கினான்.

இன்று விஞ்ஞானம் வானத்திற்கும் பூமிக்குமிடையே விரிந்து பரந்து கிடக்கின்றது. நெருப்பிற் கலந்த சூடுபோல வாழ்வோடு பிணைந்து நடக்கின்றது. விஞ்ஞானச் சுடர்ஒளி பரவாத இடம்தான் எது? முதலாவதாக போக்குவரத்துத்துறையை எடுத்துக்கொள்வோம். அன்று கால்நடையாகவே பலரும் பயணித்தார்கள். பயணச்சிரமமும் நேரவிரயமும் சொல்லும் தரமன்று துவிச்சக்கரவண்டியிலிருந்து விண்வெளிக்கலம்வரை கண்டுபிடித்த மாநிலம் இறுமாப்புடன் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

த.தர்ஷன்
இளந்தளிர் சிறுவர் கழகம்




சிறகுகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்மாறிய சிறுவன்

ஒரு ஊரில் ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள் மகன் பெயர் கமல், மகள் பெயர் கமலா. கமலா தாய் சொற்படி நடப்பாள். கமலோ தாய் சொற்படி நடக்கமாட்டான். கமலா தமது அண்ணன் கமலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வாள். ஆனால் கமலோ தனது தங்கைக்கு ஒரு உதவியும் செய்யமாட்டான். ஒரு நாள் கமல் தன் தாயிடம் சிறுவர் கழக கூட்டமென்று சொல்லிவிட்டு விளையாடச் சென்றான். விளையாடிவிட்டு வீடு திரும்பும் போது கமலின் காலில் கல்லடித்து மிகப் பெரிய காயம். இதனைக் கண்ட கமலா தனது அண்ணனுக்கு தேவையான உதவிகளை செய்து மருந்தும் கட்டினாள். அதனால் அவன் வெகுவிரைவில் குணமடைந்தான். கமலா செய்த உதவிகளையெல்லாம் கண்ட அவனுடைய தாயார் “உனது தங்கை உன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் தெரியுதா? ஆனால் நீயோ அவளோடு சண்டை போடுவதும், ஒரு உதவி கேட்டால்கூட செய்வதில்லை” என்று கூறினாள். பல அறிவுரைகளையும் கூறினாள். அதிலிருந்து கமல் தன் தங்கை மீது அன்பு கொண்டு அவளுக்கு என்ன உதவியென்றாலும் செய்து கொடுப்பான். அவனது தாயும் தங்கையும் கமலின் மனமாற்றத்தைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

றொ.றொமன்சியா
அரும்புகள் சிறுவர் கழகம்




யூ.சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்த நண்பர்களே!

நகம் கடிப்பது தவறாகும் பழக்கமாகும்

நகங்கள் எளிதாக அசுத்தமடையக்கூடியனவ.

அந்த அசுத்தங்கள் மூலம் நோய்க்கிருமிகள்

உடலுக்குள் பரவும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

எனவே நகங்களை வெட்டிச்சுத்தமாக

வைத்திருக்க வேண்டும். உணவை உண்ணும் முன்னர்

சவர்க்காரத்தைப்பூசி கைகளைச் சுத்தம் செய்துகொள்ள

வேண்டும். தினமும் பாடசாலைவிட்டு வீடு சென்றதும்

கை, கால், முகம் கழுவ மறவாதீர்கள்.

இனிமேல் நகம் கடிக்க மாட்டோம் என்று

உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்

தம்பி தங்கையரே:-

கிணற்றில் அல்லது ஆற்றில் இருந்து கொண்டுவந்த நீரை எப்போதும் கொதிக்கவைத்து ஆறியபின் பருகுவோம்.

பூ. சதீஸ்
தேந்தமிழ் சிறுவர் கழகம்

# புத்தாண்டில் பட்டாசு

புத்தாண்டு என்றாலே உடன் எமக்கு நினைவுக்கு வருவது புத்தாடையும் பட்டாசும் தான் சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் இப்பட்டாசு பல அழிவுகளையும் தந்துவிடக்கூடியது. ஆனாலும் இப்பட்டாசின் வரலாற்றில் நாம் அறிந்திருத்தல் அவசியம். சீனாவை ஆண்ட வம்சத்தினர் தான் தற்போது இருப்பது போல் காகிதத்தில் வெடிமருந்தை திணித்து வெடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர். படாஸ் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பட்டாசு என்ற பெயர் வந்தது. பட்டாசை சீனவெடி என்று அழைத்தனர். புத்தாண்டு தினத்தில் நாம் பட்டாசு வெடிப்பதுபோல் ஜேர்மனி நாட்டில் வசந்தகாலம் பிறக்கும் போது பட்டாசு வெடிப்பர். தென் அமெரிக்காவில் துறவிகள் இராணுவத்திற்கு மட்டுமே இருந்தது. பிரான்ஸ் நாட்டை ஆண்ட மன்னன் டாடாஸ் இப்படியாக உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்துள்ள பட்டாசு உலகில் பல நாடுகளில் கைத்தொழில் நிறுவனங்களில் உருவாக்கவும் ஏழைகளின் பட்டினியைப் போக்கவும் காரணமாக இருக்கின்றதோடு பட்டாசை வெடிக்கும் போது பல நச்சுக்கிருமிகள் தம் நிழலில் இருந்து அழிந்துவிடவும் உதவுகின்றது. ஆகையினால் நமது மகிழ்ச்சிக்கும் சூழல் சுத்தத்திற்கும் உதவும் பட்டாசை கவனமாக வெடித்து மகிழ்வோம்.

த.தர்சன்
இளந்தளிர் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் பற்றி...

நம் தாய்மொழி தமிழ். தமிழ் மொழியில் சிறந்த நூல்கள் உள்ளன. அவற்றில் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவர் பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் இந்தியாவில் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். அவருக்கு தெய்வப் புலவர், பொய்யாமொழிப் புலவர் எனப் பல பெயர் உண்டு.

திருக்குறளில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. குறட்பாக்கள் இரண்டு வரிகளைக் கொண்டவை. அனைவருக்கும் ஏற்ற நல்ல கருத்துக்களைத் திருக்குறள் கூறுகின்றது.

நாம் உண்மை பேச வேண்டும், தர்மம் செய்ய வேண்டும், நாம் இளமையிலேயே கல்வி கற்க வேண்டும், கல்வியே சிறந்த செல்வம் இவ்வாறு பல கருத்துக்களை திருக்குறள் கூறுகின்றது.

திருக்குறளை உலகப்பொதுமறை என்றும் தமிழ்மறை என்றும் கூறுவர்.

திருக்குறளை நாம் கற்று நல்ல பயன் பெறுவோம்.

கை. விஜிதா
வளர்பிறை சிறுவர் கழகம்

## அதிசய உலகம் :

### பாம்பை விழுங்கும் தவளை

பாம்பு தவளையைத் தின்பது தெரிந்த விசயம். ஆனால் அமீசன் காட்டுத் தவளை ஒரு பெரிய பாம்பைக்கூட விழுங்கிவிடும். அந்தப் பெரிய தவளை ஒரு பாம்பை விழுங்கி முடிக்க 36 மணிநேரம் ஆகிறது.

### பாம்புக்கு எதிரிகள் உண்டு.

இறகுகள் அடர்த்தியாகவும் அலகுகள் உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும் பறவைகள் பாம்புகளைக் கொல்கின்றன. எகிப்து நாரை பாம்புக்கு எதிரி. அது பாம்பைக் கால்களால் மிதித்துக்கொண்டு தனது நீண்ட அலகால் குத்திக்கொண்டு தின்று விடும்.

யோ.சுஜீவன்
இளந்தளிர் சிறுவர் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

அன்பு எரிச்சலுக்கு இடம் கொடாது
அன்பு தன்னலம் நாடாது
அன்பு எதையும் பொறுத்துக்கொள்ளும்
அன்பு பிறர் உடமையை விரும்பாது
அன்பு உண்மை பேசும்
அன்பு இழிவானதைச் செய்யாது
அன்பு தீவினையில் மகிழுறாது. மாறாக அன்பின் மகிழுறும்
அன்பு நல்ல மனத்துடன் தாங்கிக்கொள்ளும்

– சே. நிலோஜினி
தென்றல் சிறுவர் கழகம்.



<u>படத்திற்கு விளக்கம்</u>

இன்றைய உலகில் தீமைகள் பல நிறைந்து காணப்படுகின்றன. தீங்கு செய்யும் பாம்பினைப் போல தற்போது உலகு காணப்படுகின்றது. இதனால் பெரும்பாலும் பாதிக் கப்படுபவர்கள் சிறுவர்களே. சமாதானம் என்பது இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அது கூண்டிலடைக்கப்பட்ட புறாவைப் போன்றது. பல அடிமைத்தனங்களும், கட்டுப்பாடுகளுமே சிறுவர்களுக்கு வழங்கப்படும் சன்மானங்கள். பல கைகள் ஒன்று சேர்ந்து உழைத்தால் தான் சிறுவர்களுக்கு எதிரான தீமைகளையும் அடக்கு முறைகளையும் குறைக்க முடியும்.

அ.நிரோஜா
தென்றல் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறநாட்டுப் பழமொழிகள்

உன்னை நனைத்த கடவுளே உன்னைக் காயவும் வைப்பார். *இந்தியா*

நேரத்தை முறையாக வகுத்துக் கொள்வது மனதில் சிந்தனைகள் முறையாக அமைந்திருப்பதைக் காட்டும். *பிரிட்டன்*

மனோ தைரியம் இன்றேல் வாய்மை இல்லை. வாய்மை இன்றேல் மற்ற அறங்கள் இல்லை. *ஸ்கொட்லாந்து*

உலகத்தில் எந்த சக்தியாலும் அசைக்க முடியாத சக்தி ஒனறுள்ளது. அதுதான் மனிதனுடைய மனோசக்தி. *சுவீடன்*

பொய்யால் கவரப்படும் மனம் நல்ல விடயங்களில் சுவைகாணாது போய்விடும். *இந்தியா*

ஏழையின் கடன் ஊருக்கெல்லாம் தெரியும். *இங்கிலாந்து*

அன்னியர்களுடன் சோலையில் இருப்பதை விட நண்பர்களுடன் விலங்கிடப்பட்டிருத்தல் மேலாகும். *பாரசீகம்*

இளைஞர்கள் கூட்டமாகச் செல்வார்கள். நடு வயதினர் சோடியாகச் செல்வார்கள். வயோதிபர்கள் தனியாகச் செல்வார்கள். *இந்தியா*

இளமையில் ரோஜா மலர் மேல் படுத்திருந்தால் முதுமையில் நீ முட்கள் மீது தான் படுத்திருப்பாய் *இங்கிலாந்து*

கிணற்றுத் தவளைக்கு பரந்த கடலைப் பற்றி ஒன்றும் தெரியாது. *(யப்பான்)*

சுஜித்திரா
இளந்தளிர் சிறுவர் கழகம்

## பொது அறிவு

செல்லப் பிராணிகளால் ஏற்படும் நோய்கள் எத்தனை?
125

இலங்கையின் செய்தி நிறுவனம் எது?
லங்கா புவத்

உலகிலே பெரிய வளைகுடா எது?
மெக்சிக்கோ

உலகிலே மிகப்பெரிய விரிகுடா எது?
கட்சன் விரிகுடா

காகித வீடு காணப்படும் நாடு எது?
யப்பான்

சீனாவின் வாசல் எது?
குவாங்கோ நதி

இ.சத்தியரூபி
வளர்பிறை சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசத்தில் சிறுவர்களது நிலைப்பாடுகள்.

இன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்ற யுத்தத்தினால் அதிகம் பாதிப்புறுபவர்கள் சிறுவர்களே. இப்போர் மேகங்களினால் பெற்றோரை இழந்தும் சகோதரர்களை இழந்தும் கவனிப்பார் யாருமின்றி நடுத்தெருவில் நிற்கின்றார்கள். அத்துடன் வறுமை நிலையிலும் நிற்பதும் சிறுவர்களே. இவர்களின் வாழ்வு கேள்விக் குறியாய் இருப்பதில் வியப்பில்லை. கல்வி கற்கும் வயதில் வறுமை காரணமாக சிறுவயதிலே தொழில்களுக்குச் செல்கின்றார்கள். ஆனால் தொழில் எத்தகையது? இதனால் பாதகம் இருக்கிறதா? எனற சிந்தனை உணர்ச்சி இவர்களிடம் இல்லை. பணம் சமபாதிப்பதே இவர்களின் நோக்கமாகும். பெற்றோர்களே இதற்கு வழிகாட்டியாக இருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். தொழிலென்ற போர்வையில் பல சட்ட விரோத செயல்களுக்கு சிறுவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். போதிய கல்வியறிவு இல்லாததால் இதனை விளங்கிக் கொள்ள இவர்களால் முடிவதில்லை. இவர்களது குடும்ப சூழ்நிலையும் அதற்கு உதவுவதில்லை.

பெற்றோர் உள்ள சிறுவருக்கே இந்நிலைமையாயின் பெற்றோரற்ற சிறுவரின் நிலையை என்னவென்று கூறுவது? யாருமற்ற இவர்களை சட்டவிரோதக் கும்பல்கள் துணிவுடன் அணுகுகின்றன. பாதுகாவலர்கள் என்ற போர்வையில் அச்சிறுவர்களை பழிக்கு உள்ளாக்குகின்றனர். போதைப்பொருள் கடத்தல் பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றிற்கு சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களின் உரிமைகள் பலவந்தமாகப் பறிக்கப்படுகின்றன. இன்று யாழ் மாவட்டம் உட்பட பல மாவட்டங்களிலுமுள்ள ஏராளமான சிறுவர்கள் அனாதைகளாக உள்ளனர். இவர்கள் தவறான வழியில் வழிநடத்தப்படுகின்றனர். பெண்ணுரிமை பற்றிப் பேசும் எமது சமூகம் சிறுவர் உரிமை பற்றியும் சிந்திக்க வேண்டும். சிறுவருடைய தேவைகள் பற்றியும் உரிமைகள் பற்றியும் மக்களிடையே பேச வேண்டும். விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். வளர்ந்து வரும் உலகின் எதிர்கால சந்ததியினர் சிறுவர்கள். ஆனால் இவர்கள் தவறான பாதையில் நடாத்தப்படுவதால் சிறுவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, எமது நாட்டின் எதிர்காலமும் பாழாகிறது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரை இலவசக்கல்வி இருப்பினும் எம் போன்ற பல சிறுவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் வாழ்கிறார்கள். வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு எமது நாட்டில் இலவசக் கல்வி, சீருடை, சுகாதார வசதிகள், வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பணத்தின் தேவையும் அதிகரிக்க பல சிறுவர்கள் பெற்றோரின் விருப்பத்துடனும், தமது சொந்த விருப்பத்திலும்சிறு வயதிலேயே பல்வேறு வேலைகளுக்கும் செல்கிறார்கள். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சைக்கிள் கடைகள் உணவகங்கள், பலசரக்குக் கடைகள் போன்றவற்றறில் சிறவர்கள் வேலை செய்வதை சாதாரணமாகக் காணலாம்.

மக்களிடையே நிலவும் அறிவின்மையால் மரபுத் தொழில் பழக்கம் தேவையென்று சிறுவர்களைத தமது தொழில்களில் பெரியவர்கள் ஈடுபடுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மீன்பிடித் தொழிலில் இச செயறபாடு அதிகமாக உள்ளது.இதனால் சிறு வயதிலேயே இவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அடுத்ததாகக் கூற வேண்டிய முக்கிய பாதிப்பு போருக்குப் பிந்திய பாதிப்பு ஆகும். போர் நடவடிக்கைகளால் பல சிறுவர்கள் பெற்றோரை இழந்தும் அங்கவீனர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் மனநிலை பெரிதும் பாதிப்புற்றதாகவே உள்ளது. இவர்களில் அனாதைகனாக உள்ள சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கு செல்கின்றனர். சிறுவர் உரிமைகள் கூடுதலாக மறுக்கப்பட்டவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். வேலைக்காரச் சிறுவர்களாக உள்ள இவர்களின் வேதனைகளும், சோதனைகளும் சொல்லமுடியாதவை. வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் அடி, துன்புறுத்தலுக்கு உள்ளாவதை காணக் கூடியதாக உள்ளது. இவை சமுகத்திற்கு வெளிக்கொண்டு வரப்படாதவையாக உள்ளன.

அவையெல்லாம் என்ன? சிறுவர் சிறுமியரின் உரிமைகளை அதாவது அவர்களின் அடிப்படைத் தேவைகளை பந்தாடும் செயல்களே ஆகும். ஒரு சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டுமாயின் அவர்களின் அடிப்படைத் தேவைகளை பெரியவர்கள் நிறைவேற்றுவதுடன் அவர்களின் உணர்வுகளை மதிக்கவும் வேண்டும். எனவே நாம் சிறுவர்களின் அவல நிலையிலிருந்து அவர்களைப் பேணிப் பாதுகாப்போம்.

"சிறுவர்களின் எழுச்சி பாரிற்கு உயர்ச்சி"

யூ.சதீஸ்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## சிறுவர் உரிமைகள்




க.சதீஸ்குமார்
சிறகுகள் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?

சிறுவர்களாகிய நாங்கள் எமது நாளாந்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பல விடயங்கள் தேவை எனக் கருதுகின்றோம். எமது ஆரோக்கியத்திற்கு போசாக்கு நிறைந்த உணவு தேவை. சுத்தமான உடையும் சுகாதாரப் பராமரிப்பும் தேவை. உடல்ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாலியல் தொடர்பாகவும் நாம் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என நாங்கள் கருதுகின்றோம். எம்மிடையே உள்ள திறமைகளும் ஆற்றல்களும் வளர்க்கப்பட வேண்டும் எமது படிப்பு தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் எங்களுடைய விருப்பங்கள் வெறுப்புக்களையும் சில கருத்துக்களையும் கூற பிள்ளைகளாகிய எங்களுக்கு விருப்பம் உண்டு.

இப்படியாக நாங்கள் உயிரவாழவும், பாதுகாக்கப்படவும் திறமைகளில் வளரவும் கருத்துக்களைக் கூறவும் எமக்குத் தேவை உண்டு. இந்த அடிப்படைத் தேவைகளையே நாம் சிறுவர் உரிமைகள் என்று சிறுவர்களாகிய நாங்கள் விளங்கிக் கொள்கின்றோம்.

சிறுவர் உரிமை என்பதனை கண்கொண்டு பார்க்கும் போது சிறுவர்களாகிய நாம் எதனைப் பெற வேண்டுமென நினைக்கின்றோம்? எமது எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும் நாம் எமது நாட்டுக்கும் வீட்டுக்கும் பிரயோசனமானவர்களாக மாறவே விரும்புகின்றோம். சிறுவர்களாகிய எமது உரிமைகள் பற்றி பெற்றோர்கள் மத்தியிலும் பெரியவர்கள் மத்தியிலும் ஏன் எம் போன்ற சிறுவர்கள் மத்தியிலும் கூட போதிய விழிப்புணர்வு இல்லை. சிறுவர் உரிமைகள் பற்றி எல்லாருக்கும் நல்ல தெளிவு இருந்தால் சிறுவர்களின் உரிமைகள் சரியாக வழங்கப்பட்டால் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்படையும் எமது சமுதாயமும் முன்னேற்றமடையும்..

வ.விசாகன்
இளந்தளிர் சிறுவர் கழகம்

## சிறுவர் சிந்தனைத் துளிகள்

பொய்யனாய் இருப்பதை விட ஏழையாய் இருப்பது மேல்.
ஊக்கமுடையவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.
நேர்மையும் தாழ்மையும் வாழ்க்கையை இன்பமுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைக்கும்.
ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும் அறிவு உன் இதயத்திற்கு இன்பம் தரும்.
ஏழைகளிடத்து அன்பு கூர்ந்து வாழ்.
பிறர் குற்றத்தைத் தேடாது உன் குற்றத்தை ஏற்றுத் திருத்தி நட.
பிறரிடத்தில் காணும் நற்குணங்கள் செயல்களை பாராட்டு.
தேவையறிந்து சேவை செய்.
எண்ணெய் இன்றி விளக்கெரியாது. இறைவனின்று மனிதன் வாழ முடியாது.
தேனினும் இனியது உண்மை நட்பு.
காலம் பொன் போன்றது.
மகிழ்சியாக இருக்க பணமோ பொருளோ தேவையில்லை. உள்ளதை உள்ளவாறு ஏற்றுவாழும் நல் மனமே தேவை.

பீ.பியூட்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைப் பற்றி உலக நாடுகள்

பெண் இல்லாத வீடு பேய் வாழும் இடம்

(இந்தியா)

கோபமுற்ற பெண் கரையில்லாத கடல் பேன்றவர்.

(இத்தாலி)

வானத்திற்கு அழகு நட்சத்திரங்கள் பெண்ணின் அழகு அவளுடைய கூந்தல்.

(இத்தாலி)

ஒரு நல்ல பெண் இருக்கும் வீட்டில் ஆனந்தம் ஜன்னல் வழியாக இருக்கிறது.

(போலந்து)

பெண் இல்லாத வீடு வாளி இல்லாத கிணறு.

(பல்கோரியா)

பெண்தான் வீடு.

(நைஜீரியா)

*அ. அதிபா*
*இளந்தளிர் சிறுவர் கழகம்*

# பொன் மொழிகள்

வாழ்வில் எவ்வளவு பணம் சேர்த்தோம் என்பது முக்கியமில்லை. எத்தனை நல்ல உள்ளங்களை சம்பாதித்தோம் என்பது முக்கியம்.

நாம் விவேகத்தால் வழிகாட்டப்படுவதற்கு பதிலாக உணர்ச்சிகளால் வழி தவறுகிறோம்.

இறந்த ஒருவருக்காக நாம் உண்மையாக அழுதிருந்தால் வீடு திரும்பியதும் இறக்காது நம்முடன் வாழும் அனைவருடனும் அன்பாக பழகஆரம்பித்திருப்போம். உங்களை நம்பியவர்களை வஞ்சித்தீர்களேயானால் கடவுளால் நீங்கள் வஞ்சிக்கப்படுவீர்கள்.

கோபமும் தாபமும் பலவீனத்தின் அடையாளம்.

நீரின் ஓட்டம் ஆறு. எண்ணங்களின் ஓட்டம் மனம்.

உயர்ந்தவன் வாழ்க்கையை குறிக்கோளாக எடு. நொந்தவன் வாழ்க்கையை படிப்பினையாக எடு.
தன் அறிவை மறக்கத் தெரியாதவன் முட்டாள்.

*அ.டயானா*
*வளர்பிறை சிறுவர் கழகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காட்சி

காற்றோடு கடும் மழையும்
பெய்ய
காட்டிலே குழப்பங்கள்
காட்டிலே ஒரு காட்சி
குட்டி முயல்கள் தம் தாயுடன்
குளிருக்காய் ஒதுங்க
இடந்தேட
நீர் குடிக்க வந்த மானோ
நீராலே அடித்துச் செல்ல
காட்டிலே ஒரு காட்சி
கர்ச்சிக்கும் சிங்கங்கமும்
கரிசனை இல்லாப் புலியும்
மலைக்கு மருவாகி
மழைக்கு அடித்துச் செல்ல
காட்டிலே ஒரு காட்சி
குட்டிப் பறவை ஒன்று
குடியிருக்கும் மரத்துக்கு
பட்டுச் சிறகடித்துப் பறந்து
பரவசமாய் உள் நுழைய
பயங்கரமாய் காற்றடித்து
ஆங்கே வீழ்ந்த மரத்தில்......
காட்டிலே ஒரு.....

*சி.தர்ஷிகா*
*தென்றல்சிறுவர் கழகம்*

## கல்வியின் மேன்மை

மேன்மையைக் கொண்டு வரும்
கல்வி என்ற நல்வார்த்தையை
பூவிலும் புன்னகை மேல்
புதுப் பொழிவுடன் கற்றிடுவோம்
கல்வி என்னும் உயர் தளிர்
கற்றவனாக வாழ்ந்திட
மாண்புமிகு உலக மனிதர்களின்
மரியாதை பெற்றிட
புயல் கூட பாதை மாறி வீசினாலும்
என் கல்வி மாறி வீசாது
தென்றலெனும் காற்று திசை மாறினாலும்
கல்வியெனும் காற்று திசை மாறாது
எழுந்திரு மானிட உன் கல்வியைத் தொடர

*அ.சுபத்திரா*
*அரும்புகள் சிறுவர் கழகம்*

## என் இனிய அப்பாவிற்கு....

உம் உதிரத்தை உழைப்பாக்கி
உணவளித்த என் அப்பாவிற்கு
அன்பான அரவணைப்பு
பாசத்தின் இருப்புடன்
பரிவு கொண்ட பார்வை
பக்குவமான பேச்சு
எம் வளர்ச்சி மேன்மையாக்க
எம் ஒழுக்கத்தில் பங்கெடுத்து
இரவு பகல் பாராது
எமக்காக பாடுபட்ட
எம் இனிய அப்பாவிற்கு
என் உயிர்
இருக்கும் வரை
உம் நினைவுகள் என்
நெஞ்சில் நிலைத்திருக்கும்

*வி.யூஜின்ரா*
*தென்றல் சிறுவர் கழகம்*

### நகைச்சுவைத் துணுக்கு

ஒரு மாணவன் தனது ஆசிரியரிடம் சென்றுபின்வருமாறு கேட்டான்.

"சேர் செய்யாத தவறுக்கு நீங்கள் தண்டனை தருவீர்களா?"

"இல்லவே இல்லை. ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"சேர் நேற்று நீங்கள் தந்த வீட்டுப் பாடத்தை நான் செய்து கொண்டு வரவில்லை." என்றான் மாணவன்.

அ. டியோனிஸ்
தென்றல் சிறுவர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத சம்பவம்

சிறுவர்கள் என்றால் நாங்கள் தான். ஆனால் சிறுவர்கள் பிறருக்கு உதவி செய்தல் அவசியம். அவ்வாறு ஒரு நாள் சிறுவர்களாகிய நாம் பெரியவர்களுக்கு உதவி செய்த மறக்க முடியாத அனுபவம் ஒன்று கிடைத்தது.

ஒரு நாள் எமது கழக சிறுவர்கள் ஒன்று சேர்ந்து சுற்றுலா சென்றோம். அவ் வேளையில் வயதான ஒரு பெரியவர் சைக்கிளில் மிகவும் பாரமான விறகு கட்டைகளை சுமந்தபடி எமக்கெதிரே வந்து கொண்டிருந்தார். அவ்வாறு வந்து கொண்டிருந்தவர் திடீரென வீதியில் கிடந்த கல்லில் தடுக்கி விழுந்தார். இதனைக் கண்டு எம்முடன் வந்த எமது நண்பர்கள் சிலர் சிரித்தார்கள். அப்போது எங்களுடைய சிறுவர் கழகத் தலைவர் வந்து நாங்கள் மற்றவர்கள் துன்பப்படும் போது அதனைப் பார்த்து சிரிக்கக் கூடாது. அவர்களுக்கு உதவி செய்வது நமது கடமை. என்று கூறியதுடன் வாருங்கள் அந்த ஐயாவுக்கு உதவி செய்வோம் என்று அழைத்தார்.

நாங்கள் அந்த ஐயாவிடம் சென்றோம். அந்த ஐயா கல் தடுக்கி விழுந்து கால்களிலும் கைகளிலும் சிராய்த்துக் கீறி விறகுச் சுமையின் பாரத்தினால் திரும்பவும் எழ முடியாமல் நிலத்திலேயே கிடந்தார். எங்களுக்கு மிகவும் கவலையாக போய் விட்டது.

உடனடியாக நாங்கள் ஐயாவின் மீது கிடந்த விறகு கட்டைகளை எடுத்து விட்டு ஐயாவை தூக்கி மர நிழலில் இருத்தினோம். எமது ஒரு நண்பர் ஓடிச் சென்று சுற்றுலாவுக்கென நாங்கள் கொண்டு வந்த முதலுதவிப் பெட்டியையும் தண்ணீரையும் எடுத்து வந்தார். அதைக் கொண்டு நாங்கள் ஐயாவின் காயங்களுக்கு மருந்திட்டோம். அத்துடன் தண்ணீரும் குடிக்கக் கொடுத்தோம்.

இரு சிறுவர்கள் தாம் கொண்டு வந்த மட்டையால் விசிக்கினர் இன்னும் சிலர் அந்தப் பெரியவரின் சைக்கிளை நிறுத்தி அவரது விறகுகளை ஒழுங்காக அடுக்கினர். வீதியில் குறுக்கே கிடந்த கல்லையும் வீதி ஓரமாக வீசினர். நாம் சுற்றுலாவுக்கென கொண்டு வந்த எமது உணவுப் பாசலை அந்த ஐயாவிடம் சாப்பிடுமாறு கொடுத்தேன்.

அந்த ஐயா மனம் நெகிழ்ந்து போனார். அவர் எங்களைப் பார்த்து தம்பிகளா நீங்கள் மிகவும் நல்லவர்களாக இருக்கிறீர்கள். இந்த வயதில் உங்களது உதவி செய்யும் பண்பையும் ஆர்வத்தையும் கண்டு நான் ஆச்சரியப்படுகின்றேன். கடவுள் உங்களுக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார். நீங்கள் மிகவும் நன்றாக இருப்பீர்கள் என்று எம்மிடம் கூறினார்.

இதைக் கேட்டதும் எங்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. பின்னர் அந்த ஐயா எங்களிடம் இருந்து விடை பெற்றுச் சென்றார். அன்று முதல் யாரவது துன்பப்பட்டால் நான் கட்டாயம் உதவி செய்வேன் என்று தீர்மானம் எடுத்தேன். இதுவே எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவமாகும்.

*கு.நிமலதாஸன்*
*அரும்புகள் சிறுவர் கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிகள்

சிறுவர் THULIRGAL

இந்த சஞ்சிகையை வெளியிடுவதற்குரிய நிதியுதவியை அளித்த இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கும் (SCiSL)

இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கான ஊக்கத்தையும் ஆலோசனைகளையும் வழங்கிய விழி உள சமூக மேம்பாட்டு அமைய ஊக்குவிப்பாளர்களுக்கும் இணைப்பாளருக்கும்

சஞ்சிகை ஆக்கம் தொடர்பாக எமக்கு சிறப்பான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய திரு. பி.றெஜிஸ் நியூட்டன் (ஆசிரியர்), திரு. வெ.பூடா சதீஸ்குமார் (ஆசிரியர்) அவர்களுக்கும்

சஞ்சிகைக்கான ஆக்கங்களை எழுதியும் படங்களை வரைந்தும் உதவிய அனைத்து சிறுவர் கழக அங்கத்தவர்களுக்கும்

தட்டச்சில் பொறித்து வடிவமைத்து உதவிய யாழினி, சுபாஜினி ஆகியோருக்கும்

சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு ஊக்கமளித்த அனைத்து பெரியார்களுக்கும்

சஞ்சிகையை அழகுற அச்சிட்டுத் தந்த நோபல் பிறிண்ரேஸ் பதிப்பகத்தாருக்கும்

ஏனைய சீர ஒத்துழைப்புக்களை வழங்கிய சிறுவர்களுக்கும்

ஆக்கமும் ஊக்கமும் ஆதரவும் அளித்த பெற்றோர் ஆசிரியர்களுக்கும்

எம்மோடு தோளோடு தோள் நின்று உதவிய இளைஞர்களுக்கும்

சிறுவர் குரல் சஞ்சிகை ஆசிரியர் குழுவின் சார்பாகவும் சிறுவர் கழகங்கள் சார்பாகவும் எங்களது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், தொடர்ந்தும் வெளிவரவுள்ள சிறுவர் குரலின் அடுத்த பிரதிகளுக்கும் உங்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பினையும் உதவிகளையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.

\- ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பினையும் துஷ்பிரயோகத்தையும் பற்றி நீங்கள் கருதுவது என்ன?

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது வெவ்வேறு வகைகளாகக் காணப்படுகின்றது

உடல் ரீதியானது

பாலியல் ரீதியானது

உணர்வு ரீதியானது

சிறுவர்களாகிய நீங்கள் விரும்பாதவிடத்து எவரும் உங்களைத் தொட முடியாது. அப்படி உங்களை ஒருவர் தொந்தரவு செய்ய முயற்சித்தால் முடியாது எனக் கூறி உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சிலர் உங்களைக் கோபப்படுத்தும் பொழுதோ பயம் அடையச் செய்யும் பொழுதோ கவலைப்படுத்தும் பொழுதோ நீங்கள் அவ்வாறு உணர்வதாகக் கூறுங்கள்.

சிறுவர்களாகிய உங்கள் மீதான துஷ்பிரயோகத்திலும் சுரண்டல்களிலுமிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமைகள் உண்டு.

## துஷ்பிரயோகங்களிலிருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக்கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டியது...

நீங்களோ அன்றில் இன்னொரு சிறுவரோ துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகக் கூடிய ஆபத்தினையோ அன்றேல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுக்கொண்டோ இருப்பதாக நீங்கள் உணருவீர்களானால் பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்

சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்கள்

கிராமசேவை அலுவலர்

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு

சிறுவர் தொடர்பான பணியில் ஈடுபடும் அரச சார்பற்ற அமைப்புக்கள்

காவல்துறைத் திணைக்களம் ~ பெண்கள், சிறுவர் பீடம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

தகவல் :
விழி உளசமூக
மேம்பாட்டு அமையம்,
17/4, றெயில்வே வியூ,
கச்சேரியடி, சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org